பக்கங்கள் 21+ 03

மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | பங்குனி 22 சனிக்கிழமை 05.04.2025 | அதிர்வு 245

## இந்தியப் பிரதமருக்கு சுதந்திர சதுக்கத்தில் பிரமாண்ட வரவேற்பு



(விரிவான செய்தி 3 ஆம் பக்கத்தில்)

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



✦ மீனவர் பிரச்சினை ✦அரசியல் தீர்வு
✦ '13' நடைமுறையாக்கமும் தேர்தலும்

# மோடி – தமிழ்த் தலைவர்கள் இன்று விரிவான பேச்சுகள்

கொழும்புக்கு வந்திருக்கும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை இன்று பிற்பகல் நான்கு மணி முதல் சுமார் நாற்பது நிமிட நேரம் சந்தித்துப் பேசிய இலங்கைத் தமிழ்த் தலைவர்கள், தமிழர் பிரச்சினைக்கான அரசியல் தீர்வு, மாகாண சபைத் தேர்தல், 13 ஆவது திருத்தச் சட்டத்தின்முழுநடைமுறையாக்கம்மற்றும்மீனவர் பிரச்சினை ஆகியவை தொடர்பில் அவருக்கு விரிவாக எடுத்துரைத்தனர். 06▶

# தமிழர் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்க!

## ஜனாதிபதி அநுரவுடனான சந்திப்பின் பின்னர் நடந்த கூட்டுச் செய்தியாளர் மாநாட்டில் மோடி வலியுறுத்து

"இலங்கை அரசு தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யும் என்றும், இலங்கையின் அரசமைப்பை முழுமையாகச் செயல்படுத்துவதற்கும், மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவதற்கும் அதன் உறுதிப்பாட்டை நிறைவேற்றும் என்றும் நாங்கள் நம்புகின்றோம்."

– இவ்வாறு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள அவர், ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவுடனான 08▶





# இலங்கை - இந்தியா இடையே 7 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் பல்வேறு துறைகளில் கைச்சாத்திடப்பட்ட 7 புரிந்துணர்வு ஒப்பந்தங்களின் பரிமாற்றம் இன்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மற்றும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி முன்னிலையில் நடைபெற்றது.

இலங்கை – இந்திய உறவுகளில் ஒரு புதிய அத்தியாயத்தைக் குறிக்கும் வகையில் வலுசக்தி, டிஜிட்டல் மயமாக்கல், பாதுகாப்பு, சுகாதாரம் ஆகிய துறைகள் மற்றும் நன்கொடை உதவிகள் தொடர்பில் இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் பரிமாற்றப்பட்டன.

அதன்படி,

01. மின்சார இறக்குமதிஃஏற்றுமதிக்கான உயர் மின்னழுத்த நேரடி மின்னோட்ட (HDVC) இடை இணைப்பை செயல்படுத்துவதற்கான இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் வலுசக்தி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கே.டி.எம். உதயங்க ஹேமபால மற்றும் இந்திய வெளிவிவகார செயலாளர் விக்ரம் மிஸ்ரி ஆகியோரால் பரிமாறிக் கொள்ளப்பட்டது.

02. டிஜிட்டல் பரிமாற்றத்திற்காக மக்கள் மட்டத்தில் செயல்படுத்தப்படும் வெற்றிகரமான டிஜிட்டல் தீர்வுகளைப் பகிர்ந்து கொள்ளும் துறையில் புரிந்துணர்வு ஒப்பந்தம், டிஜிட்டல் பொருளாதார அமைச்சின் செயலாளர் வருண ஸ்ரீதனபால மற்றும் இந்திய வெளியுறவு செயலாளர் விக்ரம் மிஸ்ரி ஆகியோரால் பரிமாறிக் கொள்ளப்பட்டது.

03. திருகோணமலையை வலு சக்தி மையமாக மேம்படுத்துவதில் ஒத்துழைப்புக்காக இலங்கை, இந்தியா மற்றும் ஐக்கிய அரபு இராச்சியம் இடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தம் வலுசக்தி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கே.டி.எம். உதயங்க ஹேமபால, இந்திய வெளியுறவுச் செயலாளர் விக்ரம் மிஸ்ரி மற்றும் இலங்கைக்கான ஐக்கிய அரபு இராச்சியத் தூதுவர் காலித் நசார் அலமேரி ஆகியோர் இந்தப் பரிமாற்றத்தை மேற்கொண்டனர்.

04. பாதுகாப்பு ஒத்துழைப்பு தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஓய்வு பெற்ற எயார் வைஸ் மார்ஷல் எச்.எஸ். சம்பத் துய்யகொந்த மற்றும் இந்திய வெளியுறவு செயலாளர் விக்ரம் மிஸ்ரி ஆகியோரால் பரிமாறிக் கொள்ளப்பட்டது.

05. இந்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சிற்கும் இலங்கை சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சிற்கும் இடையிலான சுகாதாரம் மற்றும் மருந்துத் துறையில் புரிந்துணர்வு ஒப்பந்தம், சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் செயலாளர் விசேட வைத்தியர் அனில் ஜாசிங்க மற்றும் இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் சந்தோஷ் ஜா ஆகியோரால் பரிமாறிக் கொள்ளப்பட்டது.

06. மருந்து விதிமுறைகள் ஒத்துழைப்புக்காக இந்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சின் மருந்து விதிமுறைகள் ஆணைக்குழுவிற்கும் இலங்கையின் தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தும் அதிகார சபைக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம், சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் செயலாளர் விசேட வைத்தியர் அனில் ஜாசிங்க மற்றும் இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் சந்தோஷ் ஜா ஆகியோரால் பரிமாறிக் கொள்ளப்பட்டது.

07. கிழக்கு மாகாணத்தில் பல்துறை நன்கொடை உதவிக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன மற்றும் இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் சந்தோஷ் ஜா ஆகியோரால் பரிமாறிக் கொள்ளப்பட்டது.

இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையிலான "நூற்றாண்டு நட்புறவின் வளமான எதிர்காலத்திற்கான உறுதிப்பாடு" என்ற கருத்தை மீண்டும் உறுதிப்படுத்தும் வகையில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் இலங்கை விஜயம் அமைந்துள்ளது.

இலங்கை அரசாங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் மற்றும் இந்திய வெளியுறவு அமைச்சர் கலாநிதி எஸ். ஜெய்சங்கர், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல் உள்ளிட்ட இந்தியக் தூதுக்குழுவினர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.





# இந்தியப் பிரதமருக்கு சுதந்திர சதுக்கத்தில் பிரமாண்ட வரவேற்பு

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் அழைப்பை ஏற்று அரச விஜயமாக இலங்கைக்கு வருகை தந்திருக்கும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு வரவேற்பளிக்கும் உத்தியோகபூர்வ நிகழ்வு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் தலைமையில் சுதந்திர சதுக்க வளாகத்தில் இன்று முற்பகல் நடைபெற்றது.

இலங்கை மற்றும் இந்தியாவிற்கு இடையில் "நூற்றாண்டு நட்புறவின் வளமான எதிர்காலத்திற்கான உறுதிப்பாடு" என்ற எண்ணக்கருவை உறுதிப்படுத்தும் வகையில் இந்திய பிரதமர் நரேந்திர மோடி இந்த விஜயத்தை மேற்கொண்டுள்ளார்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, குதிரைப்படையை முன்னிலையாக கொண்டு சுதந்திர சதுக்க வளாகத்திற்கு அழைத்து வரப்பட்டதைத் தொடர்ந்து ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க வினால் இந்தியப் பிரதமருக்கு சிறப்பு வரவேற்பளிக்கப்பட்டது.

அதனையடுத்து இரு நாடுகளினதும் தேசிய கீதங்கள் இசைக்கப்பட்ட பின்னர் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை வரவேற்கும் உத்தியோகபூர்வ நிகழ்வு ஆரம்பமானது.

இதன்போது கௌரவ வேட்டுக்கள் தீர்க்கப்பட்டு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு வரவேற்பளிக்கப்பட்டதை தொடர்ந்து, இந்திய பிரதமர் இராணுவ அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார்.

இந்திய பிரதமர் நரேந்திர மோடி மற்றும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க ஆகியோர் பிரமுகர்களுக்கான கௌவரத்தை ஏற்றுக்கொண்டதைத் தொடர்ந்து இரு நாட்டுத் தலைவர்களும் இரு தரப்பு பிரதிநிதிகளை அறிமுகப் படுத்தினர்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை வரவேற்கும் அரச நிகழ்வில், பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய, சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன, வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத், தொழில் அமைச்சரும் பொருளாதார அபிவிருத்தி பிரதியமைச்சருமான அனில் ஜயந்த பெர்னாண்டோ, கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி, சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ, மீன்பிடி, நீரியல் மற்றும் கடல் வள அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், மேல் மாகாண ஆளுநர் ஹனீப் யூசுப் ஆகியோரும், இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ். ஜெய்சங்கர், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல், வெளியுறவு செயலாளர் விக்ரம் மிஸ்ரி, இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா உட்பட இரு நாடுகளின் சிரேஷ்ட அதிகாரிகள் குழுவும் கலந்து கொண்டனர்.











# ஜனாதிபதி அலுலகத்தில் மோடிக்கு சிறப்பு வரவேற்பு

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் அழைப்பின் பேரில் இலங்கைக்கு வருகை தந்த இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, இன்று முற்பகல் ஜனாதிபதி அலுலகத்திற்கு வருகை தந்தார்.

ஜனாதிபதி அலுவலகத்திற்கு வருகை தந்த இந்தியப் பிரதமருக்கு, ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவினால் சிறப்பு வரவேற்பளிக்கப்பட்டது.

இலங்கை மற்றும் இந்தியாவிற்கு இடையில் “நூற்றாண்டு நட்புறவின் வளமான எதிர்காலத்திற்கான உறுதிப்பாடு” என்ற எண்ணக்கருவை உறுதிப்படுத்தும் வகையில் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள இந்தியப் பிரதமர் நாளை ஞாயிற்றுக்கிழமை வரை நாட்டில் தங்கியிருப்பார்.













# “இலங்கை மித்ர விபூஷண” விருது எனக்கு வழங்கப்பட்டமை பெருமைக்குரிய விடயம்

## இந்தியப் பிரதமர் மோடி தெரிவிப்பு

இலங்கை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவால் ‘இலங்கை மித்ர விபூஷண’ விருது எனக்கு வழங்கப்பட்டமை பெருமைக்குரிய விடயம் ஆகும் என்று இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.

இந்தியா மற்றும் இலங்கைக்கு இடையிலான இரு தரப்பு ஒப்பந்தங்கள் ஜனாதிபதி அலுவலகத்தில் இன்று கைச்சாத்திடப்பட்டதையடுத்து இந்தியப் பிரதமர் மோடிக்கு ‘இலங்கை மித்ர விபூஷண’ விருது வழங்கப்பட்டது. இதன்போது கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“இந்தப் பெருமை எனக்கு மட்டுமல்ல, 140 கோடி இந்தியர்களுக்கும் கிடைத்த பெருமையாகும்.

இது இந்திய – இலங்கை மக்களுக்கு இடையிலான வரலாற்று உறவுகள் மற்றும் ஆழமான நட்புக்குகே கிடைத்த மரியாதையாகும்


உண்மையான அண்டை நாடாகவும் நண்பராகவும் நமது கடமைகளை நிறைவேற்றியிருப்பது இந்தியாவுக்குப் பெருமை சேர்க்கும் விடயமாகும்.

2019 பயங்கரவாதத் தாக்குதல், கொரோனாத் தொற்று நோய், சமீபத்திய பொருளாதார நெருக்கடி என ஒவ்வொரு கடினமான சூழ்நிலையிலும் இலங்கை மக்களுடன் நாம் நின்றுள்ளோம்.

எமது அண்டை நாடுகளுக்கு முன்னுரிமை என்ற கொள் கையிலும், தொலைநோக்குப் பார்வையான ‘மகாசாகர்’ ஆகிய இரண்டிலும் இலங்கைக்குச் சிறப்பு இடம் உண்டு.” – என்றார்.









## மோடி - தமிழ்த்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பு தாஜ் சமுத்திரா ஹோட்டேலில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானம், பதில் பொதுச்செயலாளர் எம்.ஏ.சுமந்திரன், நாடாளுமன்றக் குழுத் தலைவர் சிவஞானம் சிறீதரன், நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் மற்றும் ரெலோ தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், புளொட் தலைவர் த.சித்தார்த்தன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகிய ஏழு பேரும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

சுமந்திரன், சித்தார்த்தன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகிய மூவரும் தமிழர் தரப்பின் நிலைப்பாடுகளை எடுத்துரைத்தனர்.

“இலங்கையின் இனப் பிரச்சினை விவகாரத்தில் இந்தியாவே நேரடியாக தலையிட்டது. தொடர்ந்து இந்த விடயத்தில் காத்திரமாகப் பங்களித்தது, அந்த முயற்சி முழுமையாக நிறைவு பெறுவதற்கான நடவடிக்கையை இந்தியா தொடர்ந்து எடுக்க வேண்டிய கடப்பாடு உள்ளது.

இந்த விவகாரத்தை ஒட்டி இலங்கை – இந்தியா ஒப்பந்தம் கைச்சாத்தான போதிலும், அதில் உள்ள அதிகார பரவலாக்கள் விடயங்கள் முழுமையாக 13 ஆவது திருத்தத்தில் கொண்டுவரப்படவில்லை.

13 ஆவது திருத்தத்தில் கொண்டுவரப்பட்ட அதிகாரப் பரவலாக்கள் விடயங்கள் மேலும் வலுவூட்டப்பட்டு முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பதை 2010, 2011, 2012 கூட்டு அறிக்கைகள் மூலம் இலங்கை, இந்தியா ஆகிய இரு நாடுகளுமே ஒப்புக்கொண்டிருக்கின்றன.

அரசியல் தீர்வை மேலும் வலிமையாக்க நடவடிக்கை எடுக்கும் அதே நேரம், சட்டத்தில் உள்ள 13 ஆவது திருத்தத்தை முழுமையாக, முறையாக நடைமுறைப்படுத்தவும் மாகாண சபை தேர்தலை விரைந்து நடத்தவும் இந்தியா தொடர்ந்து இலங்கையை வலியுறுத்த வேண்டும்.

இது தொடர்பில் இன்று காலை தன்னுடைய கூட்டறிக்கையில் இந்திய பிரதமர் வலியுறுத்தமைக்காக தமிழர்களின் சார்பில் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.” – என்று குறிப்பிட்ட சுமந்திரன், தமிழர்களின் நிலங்கள் அபகரிக்கப்படுகின்ற விடயத்தை இந்தியப் பிரதமருக்கு விவரித்தார்.

திருகோணமலை மாவட்டம், குச்சவெளியை அதற்கான உதாரணமாக எடுத்துரைத்த சுமந்திரன், இந்துக் கோயில்களின் பிரதேசங்கள் அபகரிக்கப்பட்டு பௌத்த விகாரைகளின் பெயர்களில் மாற்றம் செய்யப்படுவதை விவரித்தார்.

அச்சமயத்தில் குறுக்கிட்ட இந்தியப் பிரதமர், அந்த நடவடிக்கைகள் அரசால் முன்னெடுக்கப்படுகின்றனவா, தற்போதைய அரசும் அதை மேற்கொள்கின்றதா என்று கேள்வி எழுப்பினார்.

அரசின் திணைக்களங்கள் இந்த நடவடிக்கைகளை முன்னெடுப்பதால் அவை அரசு ஆதரவோடு மேற்கொள்ளப்படுகின்ற செயற்பாடுகள்தான் என தமிழர்கள் பிரதிநிதிகள் பதில் அளித்தனர்.

இந்தியாவையும் இலங்கையையும் இணைப்பதற்குத் தரை வழிப்பாதை, விமான வழித் தடங்கள், கப்பல் பயணப் போக்குவதற்கு ஆகியவை மேம்படுத்தப்படுவதை தமிழ்ப் பிரதிநிதிகள் வரவேற்றனர். இலங்கையும் இந்தியாவும் நெருங்கி வருவது இலங்கையில் தமிழர்களுக்குப் பாதுகாப்பானது என்று அவர்கள் கருத்து வெளியிட்டனர்.

அரசியல் தீர்வைப் பொறுத்தவரை இலங்கை – இந்திய ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்ட அதிகாரப் பகிர்வு முழுமையாக முன்னெடுக்கப்பட வேண்டும் என்று குறிப்பிட்ட சுமந்திரன், அது சமஷ்டி அடிப்படையில் அமைய வேண்டும் என்பது தங்கள் கட்சியின் நிலைப்பாடு என்று குறிப்பிட்டார்.

ஒற்றையாட்சி முறைமையின் கீழ் இணக்கமான தீர்வு சாத்தியம் இல்லை என்பதைச் சுட்டிக்காட்டிய கஜேந்திரகுமார் பொன்னம்பலம், சமஷ்டி அடிப்படையிலான தீர்வுதான் நிரந்தரமான, நீதியான, நிலையான சமாதானத்தை ஏற்படுத்தும் என்பதையும் சுட்டிக்காட்டினார்.

இந்தியாவின் பாதுகாப்புக்குக் குந்தகமாக இலங்கையில் – தமிழர் பிரதேசத்தில் – சீனா காலூன்றுவதற்கு தமிழர்கள் ஒருபோதும் இடமளிக்க மாட்டார்கள் என்றும் அவர் உறுதிபடத் தெரிவித்தார்.

மீனவர் பிரச்சினை குறித்து விவரித்த சுமந்திரனும், கஜேந்திரகுமாரும் இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண்பதற்கான வழிமுறைகளைக் குறிப்பிட்டனர்.

இந்த மீனவர் பிரச்சினைக்கு அடிப்படை காரணமாக இருப்பது பாரம்பரிய முறைகளுக்கு மாறாக கடல் அடி ஆழத்தில் இருக்கும் மீன் வளத்தை அள்ளி எடுக்கும் இரட்டை மடிவலை மீன் பிடி முறைமை தடுப்பார் இன்றி தொடர்வதுதான் என்பதைச் சுட்டிக்காட்டிய சுமந்திரன், அதனைத் தடுப்பதற்கு 2017 இந்திய அரசு ஒப்புக்கொண்ட போதிலும், அது இன்னும் நடைமுறைப்படுத்தப்படாமல் இருப்பதுதான் பிரச்சினை நீடிப்பதற்கான காரணம் என்பதைத் தெளிவுபடுத்தினார்.

தமிழகத்தில் தஞ்சம் புகுந்துள்ள ஈழத் தமிழ் அகதிகள் மீள இலங்கைக்கு திரும்புவதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பது உட்பட பல விடயங்களைச் சுமந்திரன் முன்வைத்தார்.

சந்திப்புக்காகத் தமிழர் பிரதிநிதிகள் வந்தபோது முன்னைய சந்திப்புகளில் தமிழர் பிரதிநிதியாகத் தம்மைச் சந்தித்த மூத்த தலைவர்களான இரா. சம்பந்தனும், மாவை சேனாதிராஜாவும் இந்தச் சந்திப்பில் இல்லை என்று குறிப்பிட்ட இந்திய பிரதமர் நரேந்திர மோடி, அவர்கள் இருவரின் மறைவுக்கும் தமது அனுதாபங்களைத் தெரிவித்துக்கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தப் பேச்சுவார்த்தைகளில் இந்தியப் பிரதமரோடு இந்திய வெளிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர், பிரதமரின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல், வெளிவகாரச் செயலாளர் விக்ரம் மிஸ்றி, இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா மற்றும் அதிகாரிகள் பங்குபற்றினர்.

ஆங்கிலத்தில் உரையாடல் இடம் பெற்றது. இந்தி மொழியில் மொழி பெயர்ப்பு வழங்கப்பட்டது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## தள்ளிப் போகும் தேர்தல்

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் திட்டமிட்ட திகதியில் நடைபெறும் எனவும் அந்தத் திகதியில் எந்தத் திருத்தங்களும் மாற்றங்களும் செய்யப்பட மாட்டாது எனவும் தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

அதன்படி, உள்ளூராட்சி மன்றத் தேர்தல் எதிர்வரும் மே மாதம் 6 ஆம் திகதி - சரியாக இன்னும் ஒரு மாதத்தில் - நடைபெறும் என அவர் கூறியுள்ளார்.

கொழும்பில் நேற்று ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இன்றைய நிலையில் அவரது கருத்தும் உறுதிப்பாடும் சரியாக இருக்கலாம். ஆனால் தேர்தல் களத்தில் கட்டவிழும் விடயங்கள் பலடசின் கணக்கான உள்ளூராட்சி சபைகளின் தேர்தல்கள் ஒத்திவைக்கப்படக்கூடிய வாய்ப்பு இருப்பதாகவே காட்டுகின்றன.

ஏற்கனவே தெளிவுத்தாட்சி அலுவலர்களினால் நிராகரிக்கப்பட்ட 37 வேட்பு மனுக்களை ஏற்றுக்கொள்ளும்படி மேன்முறையீட்டு நீதிமன்றம் தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிட்டிருக்கிறது.

அதற்கு எதிராக தேர்தல் ஆணையம் உயர்நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்ய இருக்கின்றது. அந்த மேன்முறையீடுகளை உயர் நீதிமன்றம் பரிசீலனைக்கு ஏற்றால், அது பற்றிய விசாரணை முடியும் வரை அந்தச் சபைகளுக்கான தேர்தல் நடவடிக்கைகள் இடைநிறுத்தப்படக்கூடிய சாத்தியம் அதிகம் உண்டு.

அதே சமயம் தங்கள் வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டமையை ஆட்சேபித்து உயர் நீதிமன்றத்தில் ரிட் மனுக்களும், அடிப்படை உரிமை மீறல் மனுக்களும் தாக்கல் செய்த கட்சிகளும், தரப்புக்களும் அவை உயர்நீதிமன்றத்தினால் நிராகரிக்கப்பட்ட நிலையில் புதிய வழக்குகளை மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் முன்வைக்கக்கூடிய சாத்தியங்களும் தென்படுகின்றன.

புது வருடத்தை ஒட்டிய நீதிமன்ற விடுமுறைக்கு மத்தியில் இப்படி வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்ட கட்சிகளும் சுயேச்சைக் குழுக்களும், மறுபுறத்தில் தேர்தல் ஆணையமும் உயர்நீதிமன்றத்திலும் மேன்முறையீட்டு நீதிமன்றத்திலும் பெரும் எண்ணிக்கையில் வழக்குகளைத் தாக்கல் செய்யும்போது அவை பரிசீலனைக்கு எடுக்கப்பட்டு, விசாரணை நடைபெற்று, தீர்க்கமான முடிவு எட்டப்படுவதற்குக் காலம் செல்லக்கூடிய - இழுபடக்கூடிய - வாய்ப்புகளே அதிகம் உண்டு.

அத்தகைய சூழலில் அந்தச் சபைகளுக்கான தேர்தல்கள் தள்ளிப் போவது தவிர்க்க முடியாததாக இருக்கும்.

திட்டமிட்ட திகதியில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை முழுமையாக நடத்தி முடிப்போம் என்று தேர்தல் ஆணையம் ஒற்றைக் காலில் நின்றாலும் - உறுதி கூறினாலும் - மூன்றில் ஒரு பகுதி சபைகளுக்கான தேர்தல்களாவது தாமதப்படுவதற்கான சாத்தியங்கள் தென்படுகின்றன என்பதை மறுப்பதற்கு இல்லை.

நாட்டிலுள்ள 341 உள்ளூராட்சி சபைகளுக்கும் ஒரே நாளில் தேர்தலை நடத்தி முடிக்கும் எத்தனம் இந்தத் தடவை பெரும்பாலும் சரிவராமல் போகலாம். குறைந்தபட்சம் 75 சபைகளுக்கான தேர்தல்களாவது ஒத்திப்போடப்படக்கூடிய சூழ்நிலையே தென்படுகின்றது.

# மனைவி வெட்டிக்கொலை! கணவன் தப்பியோட்டம்!!

கொழும்பு - கிராண்ட்பாஸ் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட முவதொர உயன தொடர்மாடி குடியிருப்பில் கணவனால் கூரிய ஆயுதத்தால் வெட்டி மனைவி கொலை செய்யப்பட்டுள்ளார் என்று கிராண்ட்பாஸ் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தக் கொலைச் சம்பவம் இன்று சனிக்கிழமை அதிகாலை இடம் பெற்றுள்ளது.

கிராண்ட்பாஸ், முவதொர உயன பிரதேசத்தைச் சேர்ந்த 60 வயதுடைய பெண்ணே கொலை செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் தெரியவருவதாவது, சந்தேகநபரான கணவருக்கும் கொலை செய்யப்பட்ட மனைவிக்கும் இடையில் தகராறு ஏற்பட்டுள்ளது.

இதன்போது அங்கிருந்த 26 வயதுடைய இளைஞர் ஒருவன் தகராறைச் சமரசம் செய்த முயன்றுள்ளார்.

பின்னர் சந்தேகநபரான கணவன் தனது மனைவியையும் சமரசம் செய்த முயன்ற இளைஞனையும் கூரிய ஆயுதத்தால் பலமாக வெட்டிக் காயப்படுத்தியுள்ளார்.

காயமடைந்த இருவரும் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் மனைவி சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இதனையடுத்து சந்தேகநபர் பிரதேசத்தை விட்டுத் தப்பிச் சென்றுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கிராண்ட்பாஸ் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## தமிழர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சந்திப்பின் பின்னர் நடந்த கூட்டுச் செய்தியாளர் மாநாட்டில் மேலும் கூறியதாவது:-

"பிரதமராக, இது இலங்கைக்கு எனது நான்காவது வருகை. 2019 ஆம் ஆண்டில் எனது இறுதி வருகை மிகவும் உணர்ச்சிகரமான நேரத்தில் இடம்பெற்றது . அந்த நேரத்தில் இலங்கை எழுச்சி பெறும், மேலும் வலுவாக எழுச்சி பெறும் என்பதில் எனது உறுதியான நம்பிக்கையாக இருந்தது.

இலங்கை மக்களின் தைரியத்தையும் பொறுமையையும் நான் பாராட்டுகின்றேன், இன்று, இலங்கை மீண்டும் முன்னேற்றப் பாதையில் செல்வதைக் கண்டு நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

உண்மையான நட்பு அண்டை நாடாக இந்தியா தனது கடமைகளை நிறைவேற்றியதில் பெருமை கொள்கின்றது. அது 2019 பயங்கரவாதத் தாக்குதலாக இருந்தாலும் சரி, கோவிட் தொற்றுநோயாக இருந்தாலும் சரி, சமீபத்திய பொருளாதார நெருக்கடியாக இருந்தாலும் சரி, ஒவ்வொரு சிரமத்தின் போதும் இலங்கை மக்களுடன் நாங்கள் உறுதியாக நின்றோம்.

எனக்கு தமிழ் துறவி திருவள்ளுவரின் வார்த்தைகள் நினைவுக்கு வருகின்றன.

"செயற்கரிய யாவுள நட்பின் அது போல் வினைக்கரிய யாவுள காப்பு."

அதாவது, சவால்கள் மற்றும் எதிரிகளை எதிர்கொள்ளும் போது, ஒரு உண்மையான நண்பர் மற்றும் அவரது நட்பின் கேடயத்தை விட வலுவான உறுதி எதுவும் இல்லை.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க ஜனாதிபதியான பிறகு தனது முதல் வெளிநாட்டுப் பயணத்திற்கு இந்தியாவைத் தேர்ந்தெடுத்தார். மேலும் அவரது முதல் வெளிநாட்டு விருந்தினராகும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. இது நமது சிறப்பு உறவுகளது ஆழத்தின் அடையாளமாகும்.

அண்டை நாடுகளுக்கு முன்னுரிமை என்ற கொள்கை மற்றும் 'மகாசாகர்' என்ற தொலைநோக்குப் பார்வை இரண்டிலும் இலங்கைக்கு ஒரு சிறப்பு இடம் உண்டு. ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவின் இந்திய வருகைக்குப் பிறகு கடந்த நான்கு மாதங்களில், நமது ஒத்துழைப்பில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடைந்துள்ளோம்.

சம்பூர் சூரிய மின் நிலையம் இலங்கை எரிசக்தி இலக்கை அடைய உதவும். பல தயாரிப்பு குழாய் அமைக்கவும், திருகோணமலையை எரிசக்தி மையமாக மேம்படுத்தவும் எட்டப்பட்ட ஒப்பந்தம் அனைத்து இலங்கையர்களுக்கும் பயனளிக்கும். இரு நாடுகளுக்கும் இடையிலான கிரிட் இன்டர் - கனெக்டிவிட்டி ஒப்பந்தம் இலங்கை மின்சாரத்தை ஏற்றுமதி செய்வதற்கான வாய்ப்புகளை உருவாக்கும்.

இன்று இலங்கையில் உள்ள மதத் தலங்களுக்கு 5,000 சூரிய மின்கல அமைப்பு திறக்கப்படுவதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன். இலங்கை தனித்துவமான டிஜிட்டல் அடையாளத் திட்டத்திற்கும் இந்தியா ஆதரவளிக்கும்.

'சப்கா சாத் சப்கா விகாஸ்' என்ற தொலைநோக்குப் பார்வையை இந்தியா ஏற்றுக்கொண்டுள்ளது. எங்கள் நட்பு நாடுகளின் முன்னுரிமைகளையும் நாங்கள் மதிக்கின்றோம்.

கடந்த 6 மாதங்களில் மட்டும், 100 மில்லியன் அமெரிக்க டாலர்களுக்கும் அதிகமான மதிப்புள்ள கடன்களை மானியங்களாக மாற்றியுள்ளோம். எங்கள் இருதரப்பு 'கடன் மறுசீரமைப்பு ஒப்பந்தம்' இலங்கை மக்களுக்கு உடனடி உதவி மற்றும் நிவாரணத்தை வழங்கும். இன்று வட்டி விகிதங்களைக் குறைக்கவும் முடிவு செய்துள்ளோம். இன்றும் கூட, இந்தியா இலங்கை மக்களுடன் நிற்கிறது என்பதை இது குறிக்கின்றது.

கிழக்கு மாகாணங்களின் சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சிக்காக, தோராயமாக 2.4 பில்லியன் இலங்கை ரூபாய் ஆதரவு தொகுப்பு வழங்கப்படும். விவசாயிகளின் நலனுக்காக இலங்கையின் மிகப்பெரிய களஞ்சியசாலையினையும் இன்று நாங்கள் திறந்து வைத்தோம்.

நாளை நாம் 'மஹோ-ஓமந்தை' ரயில் பாதையைத் திறந்து வைப்போம், மேலும் 'மஹோ-அனுராதபுரம்' பிரிவில் சமிக்ஞை அமைப்புக்கு அடிக்கல் நாட்டுவோம். காங்கேசன்துறை துறைமுகத்தை நவீனமயமாக்கும் பணிகள் விரைவில் தொடங்கும்.

இலங்கையில் உள்ள இந்திய வம்சாவளி தமிழ் சமூகத்திற்காக, 10,000 வீடுகளின் கட்டுமானப் பணிகள் விரைவில் நிறைவடையும். கூடுதலாக 700 இலங்கைப் பணியாளர்களுக்கு பயிற்சி வழங்கப்படும். அவர்களில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், நீதித்துறையுடன் தொடர்புடைய பணியாளர்கள், தொழில்முனைவோர், ஊடகவியலாளர்கள் மற்றும் இளம் தலைவர்கள் அடங்குவர்.

நாங்கள் பகிரப்பட்ட பாதுகாப்பு நலன்களைக் கொண்டுள்ளோம் என்று நாங்கள் நம்புகின்றோம். இரு நாடுகளின் பாதுகாப்பும் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டது மற்றும் இணை சார்ந்தது.

இந்தியாவின் நலன்கள் மீதான அவரது உணர்திறன் காரணமாக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்காவுக்கு நான் நன்றியுள்ளவனாக இருக்கின்றேன். பாதுகாப்பு ஒத்துழைப்புத் துறையில் செய்யப்பட்ட முக்கியமான ஒப்பந்தங்களை நாங்கள் வரவேற்கின்றோம். கொழும்பு பாதுகாப்பு மாநாடு மற்றும் இந்தியப் பெருங்கடலில் பாதுகாப்பு ஒத்துழைப்பு ஆகியவற்றிலும் நாங்கள் இணைந்து பணியாற்ற ஒப்புக் கொண்டோம்.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே பல நூற்றாண்டுகள் பழமையான ஆன்மீக உறவுகள் உள்ளன.

எனது சொந்த மாநிலமான குஜராத்தின் ஆரவல்லி பகுதியில் 1960 ஆம் ஆண்டு கண்டெடுக்கப்பட்ட புத்தரின் புனித நினைவுச்சின்னங்கள், கண்காட்சிக்காக இலங்கைக்கு அனுப்பப்படுகின்றன என்பதை அறிவிப்பதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

திருகோணமலையில் உள்ள திருக்கோணேஸ்வரம் கோயிலின் புனரமைப்புக்கு இந்தியா உதவும். அநுராதபுரம் மகாபோதி கோயில் வளாகத்தில் புனித நகரத்தின் கட்டுமானத்திலும், நுவரெலியாவில் சீதா எலிய கோயிலின் கட்டுமானத்திலும் இந்தியா ஆதரவளிக்கும்.

மீனவர்களின் வாழ்வாதாரம் தொடர்பான பிரச்சினைகளையும் நாங்கள்

(09ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர்...

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

விவாதித்தோம். இந்த விடயத்தில் மனிதாபிமான அணுகுமுறையுடன் தொடர வேண்டும் என்று நாங்கள் ஒப்புக் கொண்டோம். மீனவர்கள் மற்றும் அவர்களின் படகுகளை உடனடியாக விடுவிப்பதிலும் நாங்கள் வலியுறுத்தினோம்.

இலங்கையில் புனரமைப்பு மற்றும் நல்லிணக்கம் குறித்தும் நாங்கள் பேசினோம். ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அவரது உள்ளடக்கிய அணுகுமுறையை எனக்கு மதிப்பிட்டார். இலங்கை அரசு தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யும் என்றும், இலங்கையின் அரசமைப்பை முழுமையாகச் செயல்படுத்துவதற்கும், மாகாணசபைத் தேர்தல்களை நடத்துவதற்கும் அதன் உறுதிப்பாட்டை நிறைவேற்றும் என்றும் நாங்கள் நம்புகின்றோம்.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவுகள் பரஸ்பர நம்பிக்கை மற்றும் நல்லெண்ணத்தை அடிப்படையாகக் கொண்டவை. நமது மக்களின் நம்பிக்கைகள் மற்றும் விருப்பங்களை நிறைவேற்ற நாம் தொடர்ந்து இணைந்து பணியாற்றுவோம்.

மீண்டும் ஒருமுறை, ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் அன்பான வரவேற்புக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். வரும் காலங்களில் நமது கூட்டாண்மையை புதிய உயரத்திற்கு எடுத்துச் செல்வோம் என்று நான் நம்புகிறேன்." – என்றார்.



# விசேட அதிரடிப் படையினரால் ஐஸ் போதையுடன் ஒருவர் கைது!

(சம்மாந்துறை தில்சாத் பர்வீஸ்)



அம்பாறை மாவட்டம் பெரியநீலாவனை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பெரிய நீலாவனை ஆரோக்கியம் வீதியில் வைத்து ஐஸ் போதைப் பொருளுடன் வியாழக்கிழமை (03) கல்முனை விசேட அதிரடிப் படையினர் ஒருவரைக் கைது செய்துள்ளனர்.

கல்முனை விசேட அதிரடிப்படை அதிகாரிகளுக்கு கிடைக் கப்பெற்ற இரகசியத் தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின் போது, ஐஸ் போதைப் பொருளுடன் சந்தேக நபர் கல்முனை விசேட அதிரடிப் படையினர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பெரியநீலாவனை 01 பி என்றும் இடத்தைச் சேர்ந்த 25 வயது மதிக்கத்தக்க சந்தேக நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன்போது, கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடம் இருந்து 1 கிராம் 70 மில்லிகிராம் ஐஸ் போதைப் பொருள் மீட்கப்பட்டுள்ளது என்றும் சந்தேக நபர் சான்றுப் பொரு ளுடன் சட்ட நடவடிக்கைக்காக பெரிய நீலாவனை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கைது நடவடிக்கை கல்முனை விசேட அதிரடிப்படை முகாம் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஆர்.ஏ.டி.சி.எஸ். ரத்நாயக்கவின் தலைமையில் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பெரியநீலா வனை பொலிஸார் மற்றும் கல்முனை விசேட அதிரடிப் படையினர் மேற்கொண்டு வருகின்றனர்.




# ஐஸ் போதைப்பொருளுடன் ஒருவர் கைது!



கொழும்பு, கொட்டாஞ்சேனை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பரமானந்த மாவத்தை பகுதியில் ஐஸ் போதைப்பொருளுடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று கொட்டாஞ்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

கொட்டாஞ்சேனை பொலிஸ் நிலைய அதிகாரிகள் குழுவுக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் கொழும்பு - 13 பகுதியைச் சேர்ந்த 33 வயதுடையவர் ஆவார்.

சந்தேகநபரிடம் இருந்து 11 கிராம் 200 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கொட்டாஞ்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.







# அஞ்சல் மூல வாக்களிப்பு அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களுக்கு செயலமர்வு திருமலையில்!

(முஹம்மட் றிஸ்னாத், ஹஸ்பர் ஏ.எச்.)

2025 ஆம் ஆண்டு நடைபெற வுள்ள உள்ளூர் அதிகார சபைகள் தேர்தலுக்கான அஞ்சல் மூல வாக் களிப்பு அத்தாட்சிப்படுத்தும் நடவடிக் கையில் ஈடுபடவுள்ள அலுவலர்களுக் கான (முப்படையினர்) செயலமர்வானது திருகோணமலை மாவட்ட அரச அதிபரும் தெரிவத்தாட்சி அலுவலரு மான டபிள்யூ.ஜி.எம். ஹேமந்த குமார தலைமையில் நேற்று முன்தினம் (03) மாவட்ட செயலக பிரதான மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் 22 ஆம் திகதி, பொலிஸ், மாவட்ட செயல கம் மற்றும் மாவட்ட தேர்தல்கள் அலு வலகத்தில் கடமையாற்றுப வர்களுக்கும், 23 மற்றும் 24 ஆம் திகதிகளில் பிற அரச நிறுவனங்களில் கடமையாற்றுபவர்களுக்கும், பாதுகாப் புப் படையினருக்கும் அஞ்சல் மூல வாக்களிப்பு நடைபெறவுள்ளது.

அஞ்சல் மூல வாக்களிப்பைத் தவற விட்டவர்களுக்கான மீள் வாக்களிப்பு ஏப்ரல் மாதம் 28 மற்றும் 29 ஆம் திகதிகளில் திருகோணமலை மாவட்ட தேர்தல்கள் அலுவலகத்தில் நடை பெறும்.

இதன்போது அஞ்சல் மூல வாக்க ளிப்பை நேர்த்தியாக நடத்தும் நோக் கில் அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்க ளுக்கான கடமைகள் மற்றும் பொறுப் புக்கள், ஆரம்ப கட்ட நடவடிக்கைகள், காப்புறுதிப் பொதிகள், 'டி' உறையின் முன்பக்கம் மற்றும் பின் பக்கம், அடை யாளமிடுதல், பிரச்சினைகள், அவதா னிக்க வேண்டிய விடயங்கள், இரகசியம் வெளிப்படுத்தல் படிவம், ஒழுங்குமுறை, காணக்கூடிய குறைபாடுகள், அடை யாளம் வெளிப்படுத்துகை படிவம், மாதிரி வாக்கு சீட்டு, 'டி' உறை – அடை யாளமிடப்பட்ட வாக்குச்சீட்டை வைக் கும் உறை, ஆளடையாள வெளிப் படுத்துகை, 'டி' உறை – அடையாளம் இடப்பட்ட வாக்குச்சீட்டு மற்றும் அடை யாளம் வெளிப்படுத்துகை ஆகிய வற்றைத் தெரிவத்தாட்சி அலுவல ருக்கு அனுப்பும் உறை, தபால் நிலையத்தில் கையளித்த பின் னர் செய்ய வேண்டியவை, குறிப்பேட டைப் பாரமளித்தல், விசேட கவனம் செலுத்தப்பட வேண்டிய சந்தர்ப்பங்கள், குறிப்பேடு போன்ற பல விடயங்கள் மாவட்ட உதவி தேர்தல்கள் ஆணை யாளர் எஸ். கே. டி. நிரஞ்சனால் தெளி வூட்டப்பட்டன.







# கல்வி உதவிக் கொடுப்பனவு வழங்கல்!



(சர்ஜுன் லாபீர்)

சம்மாந்துறை பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட அங்கவீனமுற்ற,மற்றும் அங்கவீனமுற்ற பெற்றோர்களது பிள்ளைகளுக்கான கல்வி உதவிக் கொடுப்பனவுக்கான காசோலைகள் வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்று (03) உதவிப் பிரதேச செயலாளர் யூ.எம் அஸ்லம் தலைமையில் இடம்பெற்றது.

சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல் முஹம்மது ஹனீபா வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனைக்கு அமைய இடம்பெற்ற இந்த நிகழ்வின் போது நிர்வாக உத்தியோகத்தர் ஜே.எம் ஜெமீல், சமூக சேவை உத்தியோகத்தர் ஏ.எம்.எம் சாபிர், கிராம நிர்வாக உத்தியோகத்தர் எஸ்.எம் நஸீர், பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் ஏ.ஜாபிர், அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.டி .முஜாஹிடீன், முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள் ஏ.யூ.எம் சமீம் மற்றும் எம்.எப் சாஜிதா ஆகியோரும் கலந்து கொண்டனர்.





# திருக்கோவிலில் கலாசார பயிற்சி நெறிகளை பூர்த்தி செய்தோருக்குச் சான்றிதழ் வழங்கல்!

(வி.ரி.சகாதேவராஜா)

புத்தசாசன மற்றும் மத கலாசார அலுவல்கள் அமைச்சின் திருக்கோவில் கலாசார மத்திய நிலையத்தில் நடைபெற்ற பல்வேறு பயிற்சி நெறிகளுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நிலையத்துக்குப் பொறுப்பான எஸ்.ரவீந்திரன் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக திருக்கோவில் பிரதேச செயலாளர் தங்கையா கஜேந்திரன் கலந்து கொண்டார்.

ஏனைய அதிதிகளாக உதவி பிரதேச செயலாளர் திருமதி.எஸ்.நிருபா, நிர்வாக உத்தியோகத்தர் டி.மங்களா ஆகியோர் கலந்து கொண்டனர்.

மேலும் பொது மக்கள், மாணவர்கள், ஆசிரியர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.








# சஜித்தின் வீட்டுத் திட்டத்தை நிறுத்தி புதிய வீட்டுத்திட்டம் வழங்க யோசனை

**(த.சுபேசன்)**

கடந்த ஆட்சிக் காலத்தில் (2019 ஆம் ஆண்டு) சஜித் பிரேமதாஸவால் வழங்கப்பட்டு இன்றுவரை பூரணப்படுத்தப்படாத நிலையில் காணப்படும் வீட்டுத் திட்டங்களை முழுமையாக நிறுத்திவிட்டு அதற்குப் பதிலாக புதிய வீட்டுத்திட்டங்களை வழங்குவது தொடர்பில் ஆராயப்படுகின்றது.

அண்மையில் தென்மராட்சியில் இடம்பெற்ற பிரதேச அபிவிருத்திக்குழுக் கூட்டத்தின் போதே இந்த விடயம் தொடர்பாக ஆராயப்பட்டது.

சஜித் பிரேமதாஸவால் வழங்கப்பட்டு இன்றுவரை மிகுதி நிதி வழங்கப்படாத வீட்டுத் திட்டங்களுக்கு மேலதிக நிதியை விடுவிக்க முடியாவிட்டால் அந்தத் திட்டத்தை முழுமையாக நிறுத்திவிட்டு புதிய வீட்டுத்திட்டங்களை அந்த மக்களுக்கு வழங்குவது தொடர்பில் நடவடிக்கை எடுக்கத் தீர்மானிக்கப்பட்டது.

தென்மராட்சியில் மாத்திரம் நூற்றுக்கணக்கான மக்களுக்கு கடந்த 2019 ஆம் ஆண்டு சஜித் பிரேமதாஸவால் வீட்டுத்திட்டம் வழங்கப்பட்ட நிலையில் அந்த மக்கள் இன்றுவரை திட்டத்தை பூரணப்படுத்த முடியாமல் தவித்து வருகின்றனர்.

ஒரு சிலர் நகைகளை அடகு வைத்தும் கடன் பெற்றும் வீடுகளை முழுமைப்படுத்திவிட்டு கடன் சுமைக்குள் அகப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கட்டாக்காலி மாடுகள் பிடிப்பு; சம்மாந்துறையில் நடவடிக்கை!

**(பாறுக் ஷிஹான்)**

சம்மாந்துறையில் போக்குவரத்துக்கு இடையூறாக காணப்பட்ட கட்டாக்காலி மாடுகளை சம்மாந்துறை பிரதேச சபை, பொலிஸாருடன் இணைந்து பிடித்துள்ளனர். இதன்போது 16 கட்டாக்காலி மாடுகளை பிடிக்கப்பட்டுள்ளன.

சம்மாந்துறை பிரதேச சபை எல்லைக்கு உட்பட்ட பிரதேசத்தில் பொதுப் போக்குவரத்துக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் விடப்பட்ட கட்டாக்காலி மாடுகளால் அன்றாடம் வீதி விபத்துக்கள் ஏற்படுகின்றன. பெறுமதியான பயிர் வகைகளும் சேதப்படுத்தப்படுகின்றன என்று பல்வேறு முறைப்பாடுகள் கிடைத்தவண்ணமுள்ளன. இதனைத் தொடர்ந்து கட்டாக்காலி மாடுகளைப் பிடிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது.



இதற்கமைவாக, 1987ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் கீழ் சம்மாந்துறை நகர் பிரதேசத்தில் போக்குவரத்துக்கு இடையூறாக திரியும் கட்டாக்காலி மாடுகள் பிடிக்கப்பட்டுள்ளன.

பிரதேச சபையால் கட்டாக்காலி மாடுகளின் உரிமையாளருக்கு பல தடவைகள் அறிவுறுத்தியும் கவனத்தில் கொள்ளாமையால் இந்த மாட்டு உரிமையாளர்கள் தண்டப்பணம் செலுத்தி தங்களது மாடுகளை அழைத்துச் செல்லுமாறும் தவறும் பட்சத்தில் ஒரு நாளைக்கு பின் மாடுகளை பெற்றுக்கொள்ளாத உரிமையாளருக்கு பராமரிப்புச் செலவும் மேலதிகமாக அறவிடப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் 03 நாட்களுக்குள் மாடுகளை உரிமையாளர்கள் பெறாவிட்டால் பொலிஸார் ஊடாக நீதிமன்றத்தில் ஒப்படைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது என்றும் பிரதேச சபை தெரிவித்துள்ளது.




EVEREST
FURNITURE
MODERN FURNITURE
FOR YOUR HOME
(416) 332-0721



everestfurniture.ca | EverestFurnitureInc | 80 FINCHDENE SQ MIX 1C1 SCARBOROUGH, CANADA

# கல்முனையில் ‘பிரசவம்’ கவிதைத்தொகுப்பு வெளியீடு!

(வி.ரி.சகாதேவராஜா)


கல்முனை நற்பிட்டிமுனையைச் சேர்ந்த எழுத்தாளர் சதானந்தம் ரகுவரன் எழுதிய “பிரசவம்” என்ற கன்னிக் கவிதைத் தொகுப்பு நூல் வெளியீடு நாளை (6) ஞாயிற்றுக்கிழமை கல்முனை வடக்கு பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் தி.ஜே. அதிசயராஜ் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில், முதன்மை அதிதியாக கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் சரவணமுத்து நவநீதன் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு அதிதிகளாக கிழக்கு மாகாண உதவிக் காணி ஆணையாளர் கே. எல்.எம். முஸம்மில், பிரபல எழுத்தாளர் உமா வரதராஜன் உள்ளிட்ட பல அதிதிகள் கலந்து கொள்ளவுள்ளனர்.

நூல் நயப்புரையைத் தென்கிழக்கு பல்கலைக்கழக பிரதிப் பதிவாளர் சஞ்சீவி சிவகுமார் நிகழ்த்தவுள்ளார்.

கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் காணிப்பிரிவு போதனாசிரியராக அரச கடமை ஆற்றும் சதானந்தன் ரகுவரனின் முதலாவது இலக்கிய படைப்பு இது என்பது குறிப்பிடத்தக்கது.








# உள்ளூராட்சித் தேர்தல் செலவின ஒழுங்கு சட்டம் தொடர்பாக விழிப்புணர்வு செயலமர்வு!

(சர்ஜுன் லாபீர்)

2025 ஆம் ஆண்டு 03 ஆம் இலக்கத் தேர்தல் செலவினத்தை ஒழுங்குபடுத்தும் சட்டம் தொடர்பாகச் சம்மாந்துறை பிரதேச சபைத் தேர்தலில் போட்டியிடும் அரசியல் கட்சிகள் மற்றும் சுயேட்சை குழுகளின் வேட்பாளர்களுக்கான விழிப்புணர்வுச் செயலமர்வு சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ். எல் முஹம்மது ஹனீபா தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

திகாமடுல்ல மாவட்ட தேர்தல்கள் தெரிவத்தாட்சி அதிகாரியும், மாவட்ட செயலாளருமான சிந்தக அபேவிக்ரம ஆலோசனை மற்றும் வழிக்காட்டுதல்களுக்கமைய மாவட்ட உதவித் தேர்தல்கள் திணைக்களத்தால் செயலமர்வு ஒழுங்கு செய்யப்பட்டது.

எதிர்வரும் மே மாதம் 06 ஆம் திகதி நடைபெறவுள்ள தேர்தலில் பிரசார அலுவல்களுக்கு செய்யப்படும் செலவுகள், கூட்டங்கள் நடத்துவதற்காக ஏற்படும் செலவுகள், அச்சிடும் நடவடிக்கைகளுக்கான செலவுகள், அச்சு, இலத்திரனியல் ஊடகங்கள் மற்றும் சமூக ஊடகங்களில் விளம்பரங்களால் ஏற்படும் செலவுகள், ஏனைய செலவுகள் சம்மந்தமாக வேட்பாளர்களுக்கு தெளிவூட்டப்பட்டது.

இந்தச் செயலமர்வு மாவட்ட தேர்தல்கள்பிணக்குகள்தீர்வகத்தின்பொறுப்பாளரும், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளருமான எம்.ஏ முனாசீர் மற்றும் நிந்தவூர் பிரதேச செயலக பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் ஏ.பி சுல்பிக்கார் ஆகியோர் வளவாளர்களாக கலந்துகொண்டு வேட்பாளர்களுக்கு தேர்தல் செலவுகள் சம்மந்தமாகத் தெளிவுபடுத்தினர்.

குணம்ஸ் சுப்பர் மார்க்கட்
GUNAAM'S SUPER MARKET
1145 Morningside Ave Unit #33,
Scarborough, ON M1B 0A7
Contact : 416 283 9998







# சந்நிதியான் ஆச்சிரம வாராந்த நிகழ்வு

சந்நிதியான் ஆச்சிரம வாராந்த நிகழ்வாக தவத்திரு வே.முருகேசு சுவாமிகளின் குருபூசையும், உதவித் திட்டம் வழங்கலும் தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில், நேற்று வெள்ளிக்கிழமை ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் இடம்பெற்றன.

தவத்திரு வே.முருகேசு சுவாமிகளின் 28 ஆவது குருபூசைத்தின நாளில் "குருபூசையின் மகத்துவம்" என்ற தலைப்பில் பேருரையை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி ஆசிரியர் துரை கணேசமூர்த்தி நிகழ்த்தினார்.

உதவித் திட்டங்களாக, தம்பாளை பொன்னம்பலவாணர் சித்தி விநாயகர் ஆலயக் கட்டடப் பணிக்காக 50 ஆயிரம் ரூபா நிதி வழங்கப்பட்டது.



# ஊழல் செய்தோரை மலையகம், வடகிழக்கு என்று பாராமல் சட்டம் தனது கடமைகளைச் செய்யும்!

## பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் தெரிவிப்பு

(பொகவந்தலாவ எஸ். சதீஸ் )

கடந்த அரசில் ஊழல் மோசடிகளில் ஈடுபட்ட மக்கள் பிரதிநிதிகள் மலையகம், வடகிழக்கு, தெற்கு என்று அல்ல. திருடர்கள் விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டு நிச்சயம் சிறைக்கு செல்வார்கள்.

உள்ளூராட்சி மன்ற தேர்தல் நிறைவடைந்தவுடன் அவர்களுக்கான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட உள்ளன. ஊழல் மோசடிகளில் ஈடுபட்டவர்களுக்கு சட்டம் தனது கடமையை செய்யும்.

பெருந்தோட்டம் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அமைச்சில் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இதனை தெரிவித்தார். இதன் போது மேலும் கருத்து தெரிவித்த பிரதி அமைச்சர்,

இன்னும் சில அரசியல்வாதிகள் ரணிலை தலைவனாக ஏற்றுக் கொண்டுள்ள தோடு அவரின் நிகழ்சி நிரலில்தான் செயற்பட்டு கொண்டிருக்கிறார்கள். நாங்கள் அவ்வாறு அல்ல. இந்த நாட்டு மக்கள் எமக்கு மிகப் பெரிய ஆணையை வழங்கியிருக்கிறார்கள். எனவே இந்த வரவு செலவு திட்டத்தைத் தயாரித்ததும் தேசிய மக்கள் சக்தி இதனை நடைமுறை படுத்தியதும் தேசிய மக்கள் சக்தி ரணிலில் செய்த தவறுகளுக்கு அவர் தண்டனை பெறுவது



உறுதியாகிவிட்டது. அவரைக் காப்பாற்றுவதற்கு மக்கள் மத்தியில் சென்று இவ்வாறான கதைகளை எதிர்கட்சியினர் கூறி வருகின்றனர். இவர்கள் கூறும் கருத்துக்களை மக்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

எமது ஜனாதிபதியால் வாசிக்கப்பட்ட வரவு செலவு திட்டத்தை சிலர் சரியாக அவதானிக்கவில்லை. பெருந்தோட்டம் மற்றும் சமுக உட்கட்டமைப்பு போன்ற இரண்டும் சேர்ந்துதான் 16 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதிலும் கட்டம் கட்டமாக வெவ்வேறாக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இவ்வளவு பெருந்தொகையான நிதியை ஒதுக்கிடு செய்ததை பொறுத்துக் கொள்ள முடியாதவர்கள் இதுபோன்ற மாற்றுக் கருத்தைத் தெரிவிக்கின்றனர்.

மலையக பெருந்தோட்ட மக்களுக்கு காணி உரிமையைக் கொண்ட தனி வீட்டுத் திட்டத்தை மக்களுக்கு முன்னெடுக்கவிருக்கின்றோம். மலையக மக்களுக்கு ஒரு போதும் மாடி வீட்டுதிட்டம் முன்னெடுக்கப்படமாட்டாது. கடந்த பொது தேர்தலில் மக்கள் எமக்கு ஆணையை வழங்கியது போல் எதிர்வரும் உள்ளூராட்சி மன்ற தேர்தலில் நாட்டில் உள்ள அனைத்து சபைகளையும் கைப்பற்ற மலையக மக்களும் இந்த நாட்டு மக்களும் முழுமையான ஆதரவைத் தேசிய மக்கள் சக்திக்கு வழங்குவார்கள்.

மலையக பகுதியில் முன்னெடுக்கப்பட்ட இந்த பிரஜா சக்தி நிலையத்தின் சேவைகள் மலையக மக்களுக்கு முலுமையாக சென்றடையவில்லை. அதில் பல்வேறு குறைப்பாடுகள் காணப்பட்டது. இதில் 44 பிரஜா சக்தி நிலையங்களில் நான்கு நிலையங்கள் மூடப்பட்ட நிலையில் காணப்படுகிறது. இதில் இயங்காமல் இருக்கும் பிரஜா சக்தி நிலையங்களை இயக்குவதற்கு நாங்கள் நிதி ஒதுக்கீட்டை மேற்கொண்டுள்ளோம். பிரஜா சக்தி நிலையங்களில் பணிபுரியும் உத்தியோகத்தர்களுக்குப் பல்வேறுபட்ட பிரச்சினைகள் காணப்படுகின்றன. அதில் பதவி உயர்வு, இடமாற்றம் அவர்களுக்கான கடமை தொடர்பிலான ஒரு தெழிவின்மை காணப்படுகிறது. எதிர்வரும் காலங்களில் அமைச்சின் ஊடாக எடுக்கப்படும் அனைத்து நடவடிக்கைகளும் மக்களிடம் கொண்டு சேர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளோம்.-என்றார்.

# பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பில் 7 வருட கடூழிய சிறைத் தண்டனை!

## வழங்கினார் திருமலை மேல் நீதிமன்ற நீதிபதி அப்துல்லாஹ்

(அபு அலா)

திருகோணமலை கிண்ணியா பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் 8 வயது சிறுவனை பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றவாளி ஒருவருக்கு 7 வருட கடூழிய சிறை தண்டனை வழங்குமாறு திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதி என்.எம்.எம்.அப்துல்லாஹ் நேற்று முன்தினம் (2) தீர்ப்பு வழங்கியுள்ளார்.

இவ்வாறு 7 வருட கடூழிய சிறை தண்டனை வழங்கப்பட்டவர் கிண்ணியா கட்டையாறு மதரஸா வீதியில் வசித்து வரும் ஜவ்பர் ரிஸ்வான் (வயது-38) எனவும் தெரியவந்துள்ளது.

கிண்ணியா கட்டையாறு பகுதியில் மத்ரசாவுக்குச் செல்லும்போது சிறுவனை, கடந்த 2015 ஆம் ஆண்டு மே மாதம் 30 ஆம் திகதி பாலியல் துஷ்பிரயோகம் செய்துள்ளார் என்று கிண்



ணியா பொலிஸாரால் குற்றவாளிக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த நிலையில் வழக்குக் கடந்த பத்து வருடங்களாக இடம்பெற்று வந்த நிலையில் திருகோணமலை மேல் நீதிமன்றில் குறித்த வழக்குக்கான தீர்ப்பு திறந்த நீதிமன்றில் வாசிக்கப்பட்டது.

மத்ரசாவுக்குச் சென்ற மாணவனை பலாத்காரமாக இழுத்துச் சென்று பாரதூரமான முறையில் பாலியல் துஷ்பிரயோகம் செய்துள்ளதாகக் கூறியே அவருக்கெதிராக குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

இதனையடுத்து குறித்த நபருக்கு 7 வருட கடூழிய சிறை தண்டனை வழங்குமாறும், 1500 ரூபா தண்டப்பணம் செலுத்துமாறும் அந்த தண்ட பணத்தைச் செலுத்தத் தவறும் பட்சத்தில் ஒரு மாத சாதாரண சிறை தண்டனை வழங்குமாறும் நீதிபதி என்.எம்.எம். அப்துல்லாஹ் கட்டளையிட்டார்.

பாதிக்கப்பட்ட சிறுவனுக்கு பத்தாயிரம் ரூபா நஷ்ட ஈடாக வழங்குமாறும் அதனை கட்டத் தவறினால் ஆறு மாத கால சிறை தண்டனை வழங்குமாறும் பாதிக்கப்பட்டோர் நிதியத்துக்குத் தண்டனைப் பணத்திலிருந்து 20 வீதம் செலுத்த வேண்டும் எனவும் திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதி என்.எம்.எம்.அப்துல்லாஹ் அந்தத் தீர்ப்பில் தெரிவித்துள்ளார்.



# ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடல்

(நூருல் ஹுதா உமர்)

இஸ்லாமிய அடிப்படைவாதம் எனும் குற்றச்சாட்டு தொடர்பிலும் மற்றும் கல்முனையின் சமகால பிரச்சினைகள், கல்முனை பிரதேச மக்கள் எதிர்நோக்கும் சமூக பொருளாதார பிரச்சினைகள் தொடர்பாகவும் ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதி மற்றும் குழுவினருக்கும் கல்முனை முஹ்யித்தீன் ஜும்ஆ பெரிய பள்ளிவாசல் மற்றும் கடற்கரை பள்ளிவாசல் நாகூர் ஆண்டகை தர்ஹா ஷரீப் நம்பிக்கையாளர் சபையினருக்கும் இடையிலான விசேட கலந்துரையாடல் செவ்வாய்கிழமை பள்ளிவாசல் ஆலுவலகத்தில் இடம்பெற்றது.

இதன்போது கல்முனை தொடர்பான சமகால விடயங்கள் தொடர்பில் விரிவாக தெளிவுபடுத்தப்பட்டு கலந்துரையாடப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.





# சமூகவியல் நோக்கில் மாணவர்களுக்கான தண்டனை...!

சிறுவர் துஷ்பிரயோகம், மனித உரிமை மீறல் என்பவற்றில் இருந்து பாதுகாத்துக் கொள்ளும் நோக்கில் மாணவர்களுக்கு தண்டனை வழங்காமல் இருப்பது குறித்து பரவலாக பேசப்படுகின்ற இந்தக் காலகட்டத்தில் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு தண்டனை வழங்காமல் இருப்பது பொருத்தமானதா? என்பது குறித்து சமூகவியல் கண்ணோட்டத்தில் ஆராய வேண்டியது அவசியமாகின்றது.

மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்குத் தண்டனை வழங்குவது பொருத்தமற்றது என்ற கருத்தாடல்கள் மாறி தண்டனைகள் இல்லாத நிலைமை மாணவர்களின் கல்வியை வெகுவாக பாதிக்கின்றது என்ற வாதப்பிரதிவாதங்கள் இன்றைய சமூகத்திடையே எழுந்துள்ளன.

மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்குவதன் மூலம் நன்னடத்தையை விருத்தி செய்து கொள்ளவும் தீய நடத்தைகளைத் தண்டனை வழங்குவதன் மூலம் நீக்கிக் கொள்ளவும் முடியும்.

சிறுபிள்ளைகளுக்கு ஊக்குவிப்புக்களாக பரிசுகள் வழங்கப்படும் போது மகிழ்ச்சிகரமான கற்றல் நடைபெறுவது போன்றே தண்டனைகளை வழங்குவதன் மூலம் கற்றல் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களையும் அடைந்து கொள்ள முடியும்.

பரீட்சையில் 90 புள்ளிகளை பெற்ற மாணவனை ஊக்குவிக்கும் முகமாக பரிசுகளை வழங்கும்போது அந்த மாணவன் அதிகூடிய புள்ளிகளை பெறுவதற்குத் தூண்டப்படுகின்றான். மீண்டும் அதிகூடிய புள்ளிகளைப் பெறுவதற்கு அந்த மாணவன் பரிசில்களையும் வெகுமதிகளையும் எதிர்பார்க்கின்றான். பரிசுகள் கிடைக்காத போது மனமுறிவு ஏற்பட்டு நோக்கங்களை கைவிடுகின்றான். உதாரணமாக இன்றைய நிலையில் பெற்றோர்கள் சிறுவர்களை ஊக்குவிப்பதாக கருதி தொலைபேசியில் விளையாட்டுகளை விளையாடுவதற்கு வாய்ப்பளிக்கின்றனர். பின் தொலைபேசி விளையாட்டுக்களுக்கு பழக்கப்பட்ட பிள்ளைகள் தொலைபேசி இல்லாமல் சாப்பிடவோ, படிக்கவோ மாட்டோம் என அடம்பிடிக்கும் நிலைமைகளையும் காண்கின்றோம்.

பெற்றோர்கள் பல்வேறு கஷ்டங்களுக்கு மத்தியிலும் பிள்ளைகளுக்கு தேவையான ஊக்குவிப்புகளை வழங்கும் பொருட்டு பிள்ளைகள் விரும்பிய பொருள்களை வாங்கிக் கொடுக்கின்றனர். பெற்றோர்களின் இத்தகைய செயற்பாடுகள் பாராட்டப்பட வேண்டிய ஒன்றாக இருப்பினும் பின்நாளில் இத்தகைய செயற்பாடுகளே பிள்ளைகளை முறைகேடான செயற்பாடுகளை நோக்கி கொண்டு செல்வதாக அமைகின்றன.

பரிசில்களாலும் பாராட்டுக்களாலும் மாத்திரம் மாணவர்கள் ஊக்குவிக்கப்படுகின்றனர் என்பது ஏற்றுக்கொள்ள முடியாததாகும். ஏனெனில் பரிசில்கள், பாராட்டுக்கள் இல்லாத மாணவர்களும் கூட சிறந்த அடைவுகளை பெறுவதுண்டு.

இந்தப் பின்னணியில் மாணவர்களின் கற்றல் அடைவில் தண்டனைகளின் அவசியம் குறித்து ஆராய வேண்டியது இன்றியமையாததாகும். ஏனெனில் ஆரம்ப காலங்களில் குடும்பத்திலும் பாடசாலைகளிலும் மாணவர்களை கண்டித்ததன் ஊடாக மாணவர்கள் நல்லொழுக்கம் வாய்ந்தவர்களாகவும் ஒழுக்கசீலர்களாகவும் சமூகப் பொருத்தப்பாடு உடையவர்களாகவும் மாறியுள்ளமையை காண முடிகின்றது. ஆனால் இன்றைய நிலையில் மனித உரிமை, சிறுவர் துஷ்பிரயோகம் முதலானவற்றுக்குப் பயந்து மாணவர்கள் விடும் தவறுகளைக் கண்டும் காணாமலும் கடந்து செல்லும் போக்கு உருவாகியுள்ளது. இதனால் ஒழுங்கற்ற மாணவர் சமுதாயமொன்று உருவாகி வருவதை காண முடிகின்றது.

“குற்றம் இழைத்தவர்களுக்கு அவர்களது குற்றத்துக்குத் தகுந்த விதத்தில் தண்டனைகள் வழங்கப்பட வேண்டும். அல்லாதபோது நீதியீனம் ஏற்படும்” எனும் இமானுவேல் கான்ட்டின் கருத்துக்கு அமைவாகத் தவறுகளுக்கு ஏற்ப தண்டனைகள் வழங்கப்பட வேண்டியது அவசியமாகின்றது. பரிசுத்த வேதாகமத்தில் நீதிமொழிகள் 23:13-14 இல் “பிள்ளையை தண்டியாமல் விடாதே. அவனைப் பிரம்பால் அடித்தால் அவன் சாகான். நீ பிரம்பால் அவனை அடிப்பதால் பாதாளத்துக்கு அவன் ஆத்துமாவைத் தப்புவிப்பாயே” என்பதன் ஊடாக தண்டனைகள் பிள்ளைகளை நல்வழிப்படுத்தும் சாதனம் என்பது புலனாகின்றது.

தொடர்ச்சி▼

# சமூகவியல் நோக்கில்...

தொடர்ச்சி▲

தண்டனைகள் இல்லாத போது ஒழுக்கமின்மை, சமத்துவமின்மை, துர்நடத்தைகள் என்பன மேலோங்கும். பொதுவாக மாணவர்களின் உளவியல் கண்ணோட்டத்தில் தண்டனை வழங்குவது குறித்து எதிரான கருத்துகள் காணப்படுகின்ற போதும் எதிர் மீள வலியுறுத்தி என்ற அடிப்படையில் தண்டனைகள் குறித்து ஆராயப்பட வேண்டியது அவசியமாகும்.

தண்டனை வழங்குவதின் நோக்கம் மாணவர்களிடம் உளவியல் ரீதியாகவோ உடலில் ரீதியாகவோ துன்பத்தை ஏற்படுத்துவது அல்ல. மாறாக குற்றமிழைத்த மாணவனை நல்வழிப்படுத்துவதாகும். மாணவர்களின் ஒழுக்கக் கேடான நடத்தைகளை அடையாளம் கண்டு அவற்றை நிவர்த்திக்கும் வண்ணமாக தண்டனைகள் வழங்கப்படுகின்றன. இருப்பினும் இன்றைய நிலையில் பாடசாலை மட்டங்களில் தண்டனைகள் வழங்கப்படும் நிலையானது குறைவடைந்துள்ளது. இன்று பெரும்பாலும் குற்றமிழைத்த மாணவர்களுக்கான தண்டனைகளாக எச்சரிக்கை செய்தல் மாத்திரமே காணப்படுகின்றது.

சில சந்தர்ப்பங்களில் மாணவர்களின் ஒழுக்கக்கேடான நடத்தைகள் மேலங்கும் போது மாணவர்களை, ஆசிரியர்கள் கண்டிக்கும் சந்தர்ப்பங்களும் உண்டு.

இத்தகைய சந்தர்ப்பங்களில் ஆசிரியர்களுக்கு எதிராகப் பெற்றோர்களும், சமூகமும் கிளர்ந்தெழுந்து போராட்டங்கள் மனித உரிமை வழக்குகள், சிறுவர் துஷ்பிரயோகம் என்ற எண்ணிலடங்கா வழக்குகளை பதிவு செய்து ஆசிரியர்களுக்கு எதிராக இடமாற்றம், ஒழுக்காற்று நடவடிக்கைகள், நீதிமன்ற வழக்குகள் முதலான நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றனர்.

உண்மையில் ஆசிரியர்கள் மாணவர்களை தண்டிக்க வேண்டும் என்றோ அல்லது உடலியல் ரீதியாக காயப்படுத்த வேண்டும் என்றோ தண்டிப்பதில்லை.

மாணவர்களின் குற்றங்களைப் பொருட்படுத்தாது ஆசிரியர்களுக்கு எதிராக கிளர்ந்தெழும் சமுதாயம் தம்மை அறியாது தமக்குத் தாமே தீங்கு விளைவித்துக் கொள்ளும் நிலைக்குத் தள்ளப்படுகின்றது.

இருப்பினும் மாணவர்களை உளவியல் ரீதியாகவோ, உடலியல் ரீதியாகவோ தண்டிப்பதும் பொருத்தமற்றது. அதனால் மாணவர்களுக்கான தண்டனைகள் மாணவர்களை கற்றலின் பால் முன்னோக்கி கொண்டு செல்வதாக அமைய வேண்டும். உதாரணமாக வகுப்பறையில் நெறிபிறழ்வான செயற்பாடுகளில் ஈடுபடும் மாணவனைத் தண்டிப்பதற்கு அவனை புத்தகத்தில் உள்ள ஒரு உரை நடையை வாசிக்கச் செய்தல், மாணவர் ஒன்று கூடலில் நற்சிந்தனை ஒன்றை முன்னெடுக்கச்செய்தல், திருக்குறள் ஒன்றை மனனம் செய்ய வைத்தல் போன்ற ஆக்க பூர்வமான தண்டனைகளை வழங்கலாம்.

இத்தகைய தண்டனைகள் மாணவர்களை ஊக்கப்படுத்துவதாகவும் மாணவர்களின் பொருத்தமற்ற நடத்தைகளை இழிவளவாக்குவதாகவும் அமையும். இதனையே American Academy of Pediatrics (2019) "குழந்தைகள் மற்றும் கட்டிளமைப்பருவ மாணவர்களின் பொருத்தப்பாடற்ற நடத்தைகளை தடுக்க உடல் அல்லது வாய்மொழி ரீதியான தண்டனைகளை பயன்படுத்துவதை விட ஒழுக்க விழுமிய உத்திகளை பயன்படுத்துமாறு ஊக்குவிக்கின்றது."

ஆசிரியர்களால் வழங்கப்படும் தண்டனைகள் அழிவுகளை ஏற்படுத்துவையாக அன்றி மாணவர்களில் நடத்தை மாற்றங்களையும் திறன் மேம்பாடுகளையும் ஏற்படுத்துவதாக அமையும் போது கற்றலினால் அடைந்து கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கப்படும் இலக்குகளை ஆக்ககரமான தண்டனைகளின் ஊடாகவே அடைந்து கொள்ள முடியும் என்பதில் ஐயமில்லை.

**பரமதயாளன் மதுசன்,**
**கல்வியியல் சிறப்புக் கற்கை,**
**நான்காம் வருடம்,**
**கல்வி, பிள்ளை நலத்துறை,**
**கிழக்குப் பல்கலைக்கழகம்.**





# ஏறாவூர் பற்று பிரதேச செயலர் பிரிவில் மாற்றுத் திறனாளிகளுடனான சந்திப்பு!

(பழுவூரான்)

ஏர்முனை மாற்று திறனாளிகள் சங்கம் ஒழுங்கு செய்திருந்த சந்திப்பில் பிரதம அதிதிகளாக ஊடகவியலாளரும், சமூக செயற்பாட்டாளரும், ஆறாம் வட்டார தமிழரசுக் கட்சியின் பிரதான வேட்பாளருமான செ.நிலாந்தன் மற்றும் சமூக செயற்பாட்டாளரும், பிரபல வர்த்தகருமான மோகன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

ஏறாவூர் பற்று பிரதேசத்தில் யுத்தத்தினால் அவயங்களை இழந்த போராளிகள், மாவீரர் குடும்பங்கள், பொதுமக்கள் உட்பட இயற்கையாக மாற்றுத் திறனாளிகளாக பிறந்தவர்கள் உள்ளடங்களாக சுமார் 850 மாற்றுத் திறனாளிகள் உள்ளனர்.

இவர்களுக்கான நலன்புரி வேலைத் திட்டங்களை ஏர் முனை மாற்று திறனாளிகள் சங்கம் முன்னெடுத்து வருகின்றது.

இன்றைய கூட்டத்தில் ஏறாவூர்ப்பற்று மாற்று திறனாளிகள் குடும்பத்தில் இடம்பெறும் மரணச் சடங்குகளை நடத்துவதற்கான ஆரம்பகட்ட நிதியுதவியை வழங்குவதற்கு சமூக செயற்பாட்டாளரும், பிரபல வர்த்தகருமான மோகன் முன் வந்தார். அதனை ஆரம்பிக்கும் முகமாக முதல் மாதத்துக்கான காசோலையை சங்க நிர்வாகத்தினரிடம் வழங்கி வைத்தார். அத்தோடு ஒரு வருடத்துக்கான நிதியுதவியையும் அவர் பொறுப் பேற்றுக் கொண்டார்.

# வக்பு சட்ட திருத்தத்துக்கு எதிராக இஸ்லாமியர்கள் ஆர்ப்பாட்டம்

## தாம்பரத்தில் ஏராளமானோர் பங்கேற்பு




வக்பு சட்ட திருத்த மசோதாவை திரும்பப் பெற வலியுறுத்தி தாம்பரத்தில் இஸ்லாமியர்கள் கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

வக்பு சட்டத் திருத்த மசோதாவை திரும்பப் பெற வலியுறுத்தியும், மத்திய அரசைக் கண்டித்து, தாம்பரம் சட்டப்பேரவைத் தொகுதிக்கு உட்பட்ட தாம்பரம் வட்டார ஐக்கிய ஜமாத் சார்பில் 500 இற்கும் மேற்பட்டோர், தாம்பரம் சண்முகம் வீதியில் வக்பு சட்டத் திருத்தத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதில், தமிழகத்தில் உள்ள அனைத்து இஸ்லாமிய ஜமாத் சார்ந்த முக்கிய நிர்வாகிகள், தாம்பரம் வட்டார முஸ்லிம் ஜமாத்தினர், கூட்டணி கட்சிகள், இஸ்லாமி யர்கள் என பலர் கலந்து கொண்டு கண்டன முழக்கமிட்டனர்.

மேலும், தாம்பரம் பகுதியில் உள்ள ஜம்ஆ பள்ளிவாசலுக்கு வெள்ளிக்கிழமை தொழுகைக்கு வந்த இஸ்லாமியர்கள் தொழுகை முடித்துபோராட்டத்தில் பங்கேற்று கண்டன முழக்கமிட்டனர். இதனால், அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.

# பாம்பன் புதிய ரயில் பாலம் திறப்பு விழா: நாளை மண்டபம் செல்கிறார் பிரதமர் மோடி

## 5 அடுக்கு பாதுகாப்பு ஏற்பாடு தீவிரம்



பாம்பன் புதிய ரயில் பாலம் திறப்பு விழாவுக்கு பிரதமர் மோடி நாளை மண்டபம் செல்கிறார். இதையொட்டி ராமேசுவரத்தில் 5 அடுக்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பாம்பன் பழைய ரயில் பாலம் பழுதடைந்ததைத் தொடர்ந்து புதிய ரயில் தூக்குப் பாலம் கட்டப்பட்டுள்ளது. இலங்கையில் சுற்றுப் பயணம் மேற்கொள்ளும் பிரதமர் மோடி அனுராதபுரத்திலிருந்து நாளை காலை 10.40 மணிக்கு இந்திய விமானப் படைக்குச் சொந்தமான ஹெலிகாப்டர் மூலம் புறப்பட்டு, பகல் 11.45 மணியளவில் மண்டபம் ஹெலிபேட் தளத்துக்கு வருகிறார்.

பின்னர், கார் மூலம் பாம்பன் சாலைப் பாலத்துக்கு வந்து பகல் 12 மணியளவில் பாம்பன் புதிய ரயில் தூக்குப் பாலத்தை திறந்து வைப்பதுடன், புதிய ஹபாம்பன் எக்ஸ்பிரஸ்' ரயில் சேவையையும் கொடியசைத்து தொடங்கிவைக்கிறார்.

அங்கிருந்து பிற்பகல் 12.30 மணியளவில் புறப்பட்டு இராமேஸ்வரம் கோயிலுக்குச் செல்லும் பிரதமர் அங்கு சுவாமி தரிசனம் செய்கிறார். பின்னர் ரயில்வே சார்பில் நடைபெறும் பாம்பன் புதிய ரயில் பாலம் திறப்பு விழாவில் பங்கேற்றுப் பேசுகிறார். அப்போது, வாலாஜாபேட்டை-ராணிப்பேட்டை, விழுப்புரம்-புதுச்சேரி, பூண்டியன்குப்பம் - சட்டநாதபுரம், சோழபுரம்-தஞ்சாவூர் பகுதிகளுக்கான நான்கு வழி வீதி திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டுகிறார்.

இந்த விழாவில் ஆளுநர் ஆர். என். ரவி, மத்திய ரயில்வே அமைச்சர் அஷ்வினி வைஷ்ணவ், மத்திய இணையமைச்சர் முருகன், மாநில அமைச்சர்கள் தங்கம் தென்னரசு, ராஜகண்ணப்பன், எம்.பி.க்கள் நவாஸ் கனி, தர்மர் உள்ளிட்டோர் கலந்து கொள்கின்றனர். நிகழ்ச்சியை முடித்துக் கொண்டு பிற்பகல் 2.35 மணிக்கு இராணுவ ஹெலிகாப்டரில் புறப்பட்டு மதுரை விமான நிலையம் செல்லும் பிரதமர் மோடி, அங்கிருந்து விமானத்தில் டில்லி செல்கிறார்.

பிரதமரின் வருகையையொட்டி ராமேசுவரம், பாம்பன், மண்டபம் ஆகிய பகுதிகளில் 5 அடுக்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ஏறத்தாழ 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொலிஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட உள்ளனர். பிரதமர் வருகை தரும் பாம்பன் பாலம், இராமேஸ்வரம் கோயில் வளாகம் உள்ளிட்ட இடங்களில் பொலிஸார் தீவிர கண்காணிப்பு மேற்கொண்டுள்ளனர். இராமேஸ்வரத்தில் உள்ள தங்கும் விடுதிகளில் சோதனையிட்டு வரும் பொலிஸார், சந்தேக நபர்கள் தங்கியுள்ளனரா என்று விசாரித்து வருகின்றனர். முக்கிய வீதிகள் மற்றும் சந்திப்புகளில் வாகன சோதனைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

மேலும், பிரதமர் வருகையையொட்டி இராமேஸ்வரம், தங்கச்சிமடம், பாம்பன், தனுஷ்கோடி, மண்டபம் ஆகிய பகுதிகளில் ட்ரோன்கள் பறக்க பொலிஸார் தடை விதித்துள்ளனர்.



# இந்தோனேசியாவில் மண்சரிவு; 10 பேர் பலி

இந்தோனேசியாவின் ஜாவா தீவில் ஏற்பட்ட மண்சரிவில் சிக்கி 10 பேர் உயிரிழந்துள்ளனர்.

மலைப்பாதையில் பயணித்த பல கார்கள் மீது மண்மேடு சரிந்து விழுந்ததில் இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

உயிரிழந்தவர்களில் 3 குழந்தைகளும் அடங்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மண்சரிவில் சிக்கியவர்களை மீட்கும் பணியை மீட்புக் குழுக்கள் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றன என வெளிநாட்டு ஊடகங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

# பப்புவா நியூகினியா தீவு கடற்பரப்பில் நில அதிர்வு

பப்புவா நியூகினியா தீவுக்கு அருகிலுள்ள கடற்பரப்பில் நில அதிர்வு ஏற்பட்டுள்ளது.

இந்த நில அதிர்வு 7.2 மெக்னிடியூட் அளவில் பதிவானதாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்த நில அதிர்வு பூமியிலிருந்து 33 கிலோ மீற்றர் ஆழத்தில் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நில அதிர்வைத் தொடர்ந்து விடுக்கப்பட்ட அபாய எச்சரிக்கை தற்போது தளர்த்தப்பட்டுள்ளது.





# உக்ரைன் மீது ரஷ்யா ஏவுகணைத் தாக்குதல்!

## 18 பேர் பலி

மத்திய உக்ரைன் நகரமான கிரிவி ரிஹ் மீது ரஷ்யா நடத்திய ஏவுகணை தாக்குதலில் சிறுவர்கள் உட்பட 18 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

உக்ரைன் ஜனாதிபதி வொளாடிமிர் ஜெலன்ஸ்கி வளர்ந்த நகரான கிரிவி ரிஹ் மீது நடத்தப்பட்ட இந்த தாக்குதலில் 9 சிறுவர்கள் உயிரிழந்துள்ளனர் என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

ரஷ்யாவின் ஏவுகணை தாக்குதலில் மக்கள் குடியிருப்பு சேதமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தநிலையில் இந்த தாக்குதலில் காயமடைந்த பலர் தற்போது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, இந்த தாக்குதல் தொடர்பில் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ள ரஷ்ய பாதுகாப்பு அமைச்சு, "இராணுவ தரப்பினர் மற்றும் மேற்கத்தேய பயிற்றுவிப்பாளர்களை" இலக்கு வைத்து தாக்குதல் நடத்தியதாகத் தெரிவித்துள்ளது.

இந்த தாக்குதலில் 85 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என ரஷ்ய பாதுகாப்பு அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

எனினும் இந்த விடயம் இதுவரையில் உறுதிப்படுத்தப்படவில்லை எனச் சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

பக்கங்கள் - 3

கனடா முரசு

சனிக்கிழமை 05/04/2025

## ஆயுதங்களுடன் இருவர் மிசிசாகா பகுதியில் கைது



C2 ▶



# அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் வாகன உதிரிப்பாகங்களுக்கு 25 சதவீத வரி விதிப்பு

## கனடா பதிலடி

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்பின் அதிரடியான வரி விதிப்புக்களுக்கு கனடா பதிலடி கொடுத்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அதன்படி, அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்படும், வாகன உதிரிபாகங்களுக்கு 25 சதவீத வரி விதிக்கப்போவதாக கனடா தெரிவித்துள்ளது.


அமெரிக்க ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் பொறுப்பேற்ற முதல் நாளில் இருந்து பல்வேறு அதிரடி அறிவிப்புகளை வெளியிட்டு வருகிறார்.

அந்தவகையில், அவர் பல்வேறு நாடுகளுக்கு பரஸ்பர வரி விதித்துள்ளார். ஆனால் கனடா மற்றும் மெக்சிகோவிற்கு புதிய வர்த்தக வரிகளைச் சேர்க்கவில்லை.

இருப்பினும், கனடாவின் எஃகு, அலுமினியம் மற்றும் வாகனங்கள் மீது 25 சதவீத வரிகளை ட்ரம்ப் விதித்துள்ளார்.

இந்நிலையில், அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்படும், வாகன உதிரிபாகங்களுக்கு 25 சதவீத வரி விதிக்கப்போவதாக கனடா அறிவித்துள்ளது.

C2 ▶



# எட்மொன்டன் நகரம் அருகே பயங்கர விபத்து; 2 பேர் பலி

எட்மொன்டன் நகரத்தின் தெற்கில் உள்ள அதிவேக நெடுஞ்சாலை 21 டவுன்ஷிப் வீதி 502 பகுதியில் இடம்பெற்ற கோர விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

மேலும் இருவர் பெரும் காயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கியா பொர்ட்டே முயை குழசவந மற்றும் ஹையுன்டாய் சான்டா Hyundai Santa Fe ஆகிய இரண்டு வாகனங்கள் நேருக்கு நேர் மோதி விபத்து ஏற்பட்டதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்த சம்பவத்தில் 33 வயதான மற்றும் 73 வயதான இருவர் உயிரிழந்துள்ளனர்.

ஹையுன்டாய் சான்டா ப்வீ உலரஎ-னயை ளுயவெய குந வாகனத்தில் இருந்த இரண்டு பயணிகள், பலத்த காயங்களுடன் மருத்துவமனையில் சிகிச்சை பெறுகின்றனர்.

இந்த விபத்து தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.



# ஆயுதங்களுடன் இருவர் மிசிசாகா பகுதியில் கைது

பீல் பொலிஸார் மிசிசாகாவில் உள்ள வீடொன்றில் சோதனை மேற்கொண்ட போது இரண்டு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் சட்டவிரோதமான முறையில் ஆயுதம் வைத்திருந்தார் என தெரிவிக்கப்படுகின்றது.

சந்தேக நபர்களிடமிருந்து பெருந்தொகை பணம் மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த சம்பவத்தில் சாகரி மெக்குல்லா (18 வயது) மற்றும் சோபியா அரூடா (23 வயது) ஆகிய இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பிலான தகவல்கள் ஏதேனும் கிடைக்கப் பெற்றால் அறிவிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# டொரொண்டோவில் ஒருவர் கொலை; குற்றத்தை ஒப்புக்கொண்டார் சிறுமி



டொரொண்டோவில் வீடற்ற நபர் ஒருவரை கொலை செய்ததாக சிறுமியொருவர் நீதிமன்றில் ஒப்புக்கொண்டுள்ளார்.

வீடற்றவரான 59 வயதான கென்னத் லீ என்ற நபரே இவ்வாறு கொலை செய்யப்பட்டிருந்தார்.

மற்றொரு குற்றச்சாட்டுள்ள குற்றவாளிக்கு எதிராக இரண்டாம் நிலை கொலை வழக்கு தொடரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

லீயின் மரணத்தின் சில மணி நேரங்களில், எட்டு சிறுமிகள் இரண்டாம் நிலை கொலைக்காக கைது செய்யப்பட்டனர்.

இதில் ஐந்து பேர் குறைந்த குற்றச்சாட்டுகளுக்காக பொறுப்பேற்று ஒப்புக்கொண்டனர்.

இதில் நான்கு பேர் கொலைக்குரிய குற்றச்சாட்டை ஒப்புக்கொண்டனர், மற்றும் ஒருவர் தாக்குதல் மற்றும் ஆயுதத்தால் தாக்குதல் செய்ததாக ஒப்புக்கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

**அமெரிக்காவிலிருந்து...**

**(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)**

இது குறித்து கனேடிய பிரதமர் மார்க் கார்னி தெரிவிக்கையில்,

“அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் அனைத்து வாகன உதிரி பாகங்களுக்கு 25 வீத வரி விதிக்கப்படுகிறது.

ட்ரம்பின் வரி விதிப்பு நடவடிக்கைகள் உலக வர்த்தகத்திற்கு ஒரு சோகம். தங்கள் சொந்த மக்களுக்கு ஏற்படக் கூடிய சேதத்தைக் கருத்தில் கொண்டு, அமெரிக்க நிர்வாகம் வரி விதிப்பு முடிவை மாற்ற வேண்டும்.

அமெரிக்கா அணுகுமுறையை மாற்ற நீண்ட காலம் ஆகலாம்.” என அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, ட்ரம்பின் புதிய வரிகள் உலக சந்தைகளில் அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்தியுள்ளமை என்பது குறிப்பிடத்தக்கது.




# கனடாவில் இந்தியர் கத்தியால் குத்திக் கொலை; ஒருவர் கைது

கனடாவின் ஒட்டாவா அருகே உள்ள ராக்லேண்ட் பகுதியில் இந்தியர் ஒருவர் கத்தியால் குத்திக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்த கொலை தொடர்பாக சந்தேகத்தின் பேரில் ஒருவரை கைது செய்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

சம்பவம் குறித்த மேல் விவரங்கள் எதுவும் வெளியாகவில்லை. மேலும், கத்தியால் குத்தப்பட்டு இந்தியர் ஒருவர் பரிதாபமாக உயிரிழந்த சம்பவம் மிகுந்த வருத்தத்தை அளிப்பதாகவும் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்றும் கனேடிய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பாதிக்கப்பட்டவரின் குடும்பத்திற்கு அனைத்து உதவிகளும் செய்யப்படும். உயிரிழந்த இந்தியரின் குடும்பத்தினரோடு நாங்கள் தொடர்பில் இருக்கிறோம் என கனடாவில் உள்ள இந்திய தூதரகம் தெரிவித்துள்ளது.




# யோர்க்கில் போதைப் பொருள் பயன்பாடு தொடர்பில் எச்சரிக்கை

கனடாவின் யோர்க் பிராந்தியத்தில் அதிக அளவில் போதைப் பொருள் பயன்பாடு தொடர்பில் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஒழுங்குபடுத்தப்படாத போதைப் பொருள்கள் மிகவும் ஆபத்தானவை மற்றும் உயிருக்கு கேடு விளைவிக்கும் என்று மக்களை எச்சரித்துள்ளனர்.




கடந்த மாதம் யோர்க் பிராந்தியத்தில் 44 வயதான பெண், 35 வயதான ஆண் மற்றும் 22 வயதான ஆண் என மூன்று பேர் மிதமிஞ்சிய அளவில் போதை மருந்து உட்கொண்டு உயிரிழந்துள்ளனர்.

சட்டவிரோதமான முறையில் போதை மருந்து பயன்படுத்தப்படுவதனால் இவ்வாறான மரணங்கள் சம்பவிக்கின்றன என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சட்டவிரோத போதை மருந்துகளில் உள்ளடக்கப்பட்டுள்ள பொருள்கள் என்ன என்பது தெரியாத காரணத்தினால் அதனால் ஏற்படக்கூடிய ஆபத்துக்கள் மிக மோசமானவை என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.